<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 325/2020

இன்று 2023 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.ஆர்.கார்த்திகேயன்,B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : பழனிச்சாமி

தந்தை பெயர் : பெரியண்ணன்

வயது : 50

<u>முதல் விசாரணை</u>

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் கூறியுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியும். அவை நான் கூறியவை தான். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள கோருகிறேன். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யக் கேட்டுக் கொள்கிறேன்.

18.04.2018 ம் தேதியிட்ட வாதியின் பெயரிலுள்ள கிரய ஆவணம் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1

14.10.2020 ம் தேதியிட்ட சொத்து வரி ரசீது அசல் வா.சா.ஆ.2

15.10.2020 ம் தேதியிட்ட வாதி பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.3

16.10.2020 ம் தேதியிட்ட 1 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.4

16.10.2010 ம் தேதியிட்ட 2 ம் பிரதிவாதி அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை அசல் வா.சா.ஆ.5

வாதியின் ஆதார் அட்டை நகல் வா.சா.ஆ.6 (நகல் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது)

தாவாப்படி தீர்ப்பாக கேட்டுக் கொள்கிறேன்.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

R KARTHIKEYAN

Digitally signed by R KARTHIKEYAN
Date: 2023.04.20 16:20:49 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி(பொறுப்பு)

திருப்பூர்.